# தமிழ் மொழி பல வழிகளில் புது வடிவில் உருவெடுத்திட வேண்டும்!

## காரைக்குடியில் முதல்வர் முன்னிலையில் ப.சிதம்பரம் எம்.பி.பேச்சு!

சிவகங்கை, ஜன. 26 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. குடும்பத்தினரால் ரூபாய் 12 கோடியில் வளர் தமிழ் நூலகம் கட்டப்பட்டுள்ளது.

அந்த நூலகத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப. சிதம்பரம் நூலகத்திற்கான நோக்கம் குறித்து பேசியதாவது:-

இந்த விழா வழக்கமான விழாவாக கொண்டாடப்படவில்லை. தமிழ் மற்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்காக இந்த விழா நடைபெறுவதாக கருதுகிறேன். இளம் வயதில் என்னுடைய தாயார் லட்சுமி என்னை தமிழ் ஆங்கிலம் படிக்குமாறு வற்புறுத்தி வந்தார்.

இதனால் நான் தமிழ் மொழி படித்ததால் தமிழில் அதிக ஆர்வம் கொண்டவனானேன். நான் தமிழ் மொழியை அதிகமாக பேசி நேசிப்பதற்கு காரணமாக இருந்தவர் என் தாயார். தமிழ் மொழி மீது இன்று வரை பற்று ஏற்பட காரணம் முனைவர் ராஜேந்திரன், பதிப்பாளர் கவிதா சொக்கலிங்கம் ஆகியோருக்கு நான் இன்று நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நாம் அனைவரும் தமிழ் வாழ வேண்டும் வளர வேண்டும் என்று விரும்புகிறோம். நினைத்து வருகிறோம் அதை 9 கோடி தமிழர்களும் நினைத்திட வேண்டும். தமிழ் என்றும் ஆட்சி



கோலவேண்டும். எங்கும் என்றும் ஆட்சி மொழியாக திகழ வேண்டும்.

இசை தமிழ், நாடகத்தமிழ், மட்டும் போதாது. நாடக தமிழ், சட்டம் தமிழ், மருத்துவம் தமிழ் போன்று டிஜிட்டல் தமிழ், ரோபோடிக்ஸ் போன்று தமிழ் பல்வேறு பரிமாணங்களில் புதிய வடிவமைப்பினை பெறவேண்டும். இங்கு அமைந்துள்ள இந்த நூலகம் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி மையமாக அமைய வேண்டும் என்று விரும்புகிறேன். சிறுகதை, கவிதை வரலாறு மற்றும் போன்றவற்றிற்கு இந்த நூலகம் நாற்றங்காலாக அமைய வேண்டும். சிவகங்கை மாவட்டம் தமிழ் வளர்த்த பூமியாகும். வள்ளல் அழகப்ப செட்டியார் எங்களுக்கு கிடைத்த மிகப்பெரிய வரமாகும்.

எங்களுக்கு அறிவுப்பசி அதிகம். யானைப்பசிபோன்றது. அதற்கு இங்கு உள்ளவர்கள் உதவவேண்டும். தமிழ்நாடு முதல்வர் அவர்கள் இந்த நூலகத்திற்கு உதவிட வேண்டும். எங்களது குடும்பத்தினருக்கு இங்கு வளர் தமிழ் நூலகம் ஏற்படுத்தி தந்ததற்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. பேசினார்.

---

### பஞ்சாபில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில்

# தமிழ்நாடு வீராங்கனை மீது தாக்குதல் நடந்ததாக வந்த தகவலையடுத்து மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய உரிய நடவடிக்கைகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் விளக்கம்!

**சென்னை, ஜன.26–**

**சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் அளித்த விளக்கம் வருமாறு:–**

2024 – 25–ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான பெண்கள் கபடி போட்டி பஞ்சாப்பில் உள்ள பதிண்டா மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. தமிழ்நாட்டில் இருந்து அன்னை தெரசா பல்கலைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகத்தில் இருந்து 36 வீராங்கனைகள் சென்றுள்ளார்கள். அவர்களுடன் 3 மேலாளர்கள் (டீம் மேனேஜர்ஸ்) மற்றும் 3 பயிற்றுநர்கள் (கோச்சர்ஸ்) உடன் சென்றுள்ளார்கள்.

இன்று நடைபெற்ற போட்டியில் மதர் தெரசா பல்கலைக்கழகத்திற்கும் தர்பங்கா பல்கலைக் கழகத்திற்கும் இடையே நடந்த கபடி போட்டியின் போது தமிழ்நாட்டு வீராங்கனை மீது தாக்குதல் நடந்ததாக இன்று காலை புகார் வந்தது, உடனடியாக அலைபேசியில் அழைத்து நாங்கள் பேசியிருக்கிறோம்.

இந்த புகாரின் அடிப்படையில் பயிற்றுநர் பாண்டியராஜன் அவர்களை காவல்துறையினர் விசாரணைக்கு அழைத்து சென்றுள்ளனர். மேலும் இந்த விவகாரம் குறித்து தெரிய வந்ததும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக உடனடியாக அங்குள்ள சம்பந்தபட்ட மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோரை தொடர்பு கொண்டு அங்கு நம் மாணவர்களுடைய பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நமது முதலமைச்சர் அவர்கள் எடுக்க உத்தரவிட்டுள்ளார்.

மேட்ச் நடக்கும்போது பாயிண்ட்ஸ் தொடர்பாக சிறிய மனக்கசப்பு ஏற்பட்டு இந்த இரு அணிகளுக்கிடையே சிறு வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அதனால் ஒரு பதட்டமான சூழல் நிலவியுள்ளது. அதுதான் இன்று சமூக வலைதளங்களிலும், தொலைக் காட்சியிலும் வீடியோ வந்துள்ளது.

சம்பந்தபட்ட மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து உடனடியாக இதை சரி செய்திருக்கின்றோம். மேலும் இன்றே நமது வீராங்கனைகள் அனைவரையும் பதிண்டாவிலிருந்து டெல்லி அழைத்துச் செல்லவும் பேருந்து வசதிகள் செய்யப்பட்டு, அவர்கள் கிளம்பி விட்டார்கள். அதே போல கைதுசெய்யப்பட்ட நம்முடைய பயிற்றுநர் பாண்டியராஜன் அவர்களையும் காவல்துறையினர் விடுவித்துள்ளார்கள்.

வீராங்கனைகள் மற்றும் பயிற்றுனர்கள் இன்று நள்ளிரவு டெல்லி சென்று தமிழ்நாடு இல்லத்தில் தங்க வைக்கப்பட்டு, உணவு, தங்குகின்ற வசதிகள் அனைத்தும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் பெயரில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. உடன் சென்றுள்ள உடற்கல்வி இயக்குநர் கலையரசி அவர்களுடன் நான் தொலைபேசியில் பேசி இருக்கிறேன். எந்தவிதமான பதட்டமான சூழ்நிலையும் இல்லை, அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர், யாரும் அச்சம் கொள்ள வேண்டாம், வதந்திகளை பரப்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

கேள்வி: ஐ.ஏ.எஸ் அலுவலர்கள் யாரும் செல்ல ..

பதில்: நம்முடைய கூடுதல் தலைமைச் செயலாளர் (ஏசிஎஸ்) அதுல்ய மிஸ்ரா, அந்த மாநிலத்தின் டி.ஜி.பி. அவர்களுடன் பேசியுள்ளார். மேலும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத ரெட்டி, அந்த மாவட்டத்தின் எஸ்.பி மற்றும் கலெக்டருடன் பேசிவிட்டார்.

பாயிண்ட் சிஸ்டத்தில் ஒரு சிறு குளறுபடியாகி மாணவர்களுக்குள் சிறிய தள்ளுமுள்ளு எற்பட்டுள்ளது. யாருக்கும் பெரிய அடி ஏதும் கிடையாது. சிறு சிராய்புகள்தான். அங்குள்ள மருத்துவமனைக்கு யாரையும் கூட்டிச் செல்லவில்லை. அங்கி ருக்கக் கூடிய முதலுதவி பெட்டி, (பர்ஸ்ட் எய்டு கிட்) மூலமாகவே சரி செய்து உள்ளார்கள். அனைத்து மாணவிகளும் பாதுகாப்பாக உள்ளார்கள்.

கேள்வி: விளையாட வெளி மாநிலத்திற்கு செல்லும் மாணவ, மாணவிகளின் பாதுகாப்பிற்கு வருங்காலத்தில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பதில்: விளையாட்டு வீராங்கனைகள் உடன் பிசிக்கல் டைரக்டர்ஸ் அனுப்பியுள்ளோம், கோச்சர்ஸ் எல்லோரையும் பாதுகாப்பிற்காகத்தான் அனுப்பியுள்ளோம். தொடர்ந்து எல்லா மாநிலங்களுக்கும் சென்று விளையாடி வருகின்றார்கள். கண்டிப்பாக அடுத்துமுறை செல்லும் போது கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்படும் என்று துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.




இராஜபாளையம் தொகுதியில் நேற்று (25.01.2025) காலை 9 மணியளவில் தேவதானம் அருள்மிகு தவம்பெற்ற நாயகி நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி திருக்கோவில் தெப்பத்தை சீரமைக்கும் பணியை எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் செயல் அலுவலர் கலாராணி, பொதுக்குழு உறுப்பினர் கனகராஜ், சேத்தூர் சேர்மன் பாலசுப்ரமணியன், ஒன்றிய அவைத்தலைவர் மிசா நடராஜன், கிளைச் செயலாளர் அரிராம்சேட், முருகேசன் மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் சேகர் மற்றும் ஒப்பந்ததாரர், பணியாட்கள் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வி.பி. அகிலன்
### சனவரி 26 (2016)



**இளம் வயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.**

**ஒருங்கிணைந்த செங்கற்பட்டு மாவட்ட துணைச் செயலாளராக – திருவள்ளூர் மாவட்ட அவைத் தலைவராகப் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.**

**காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராகவும், சைதாப்பேட்டை கூட்டுறவு நிலவள வங்கித் தலைவராகவும், திருவள்ளூர் மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதோடு, நெருக்கடிகால 'மிசா' கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# திராவிட இனத்தின் தொன்மையை உலகுக்கு உணர்த்திய நம் திராவிடத் தலைவன்!



இராமாயண காலத்தில் ஃபிளைட் இருந்ததாக பீலா விடும் கோமிய அறிவுஜீவிகள் உலவும் தமிழ்நாட்டில், "5,300 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் நிலத்தில் இரும்பு உருக்கு தொழில்நுட்பம் அறிமுகமாயிருந்ததை அறிவியல்பூர்வமாக நிரூபித்து, இரும்புக் காலம் என்பதன் முன்னோடி தமிழ் நிலம்தான், தமிழ் நிலத்தில் இருந்துதான் இரும்புக் காலம் தொடங்கியது" எனப் பிரகடனப்படுத்தி, மனித நாகரிக வளர்ச்சி குறித்த ஆராய்ச்சிகளில் ஒரு புதிய மாற்றத்தை, புரட்சியைத் தொடங்கி வைத்திருக்கிறார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நம் திராவிடத் தலைவன்.

கீழடியில் கண்டெடுக்கப்பட்ட தொல்லியல் ஆதாரங்கள், இனி இந்திய வரலாற்றை வடக்கிலிருந்து அல்ல, தெற்கிலிருந்து, அதுவும் தமிழ் நிலத்தில் இருந்துதான் தொடங்க வேண்டும் என்ற கண்ணோட்ட மாற்றத்தை வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியது என்றால், நம் தளபதி அவர்களின் இரும்புக் காலம் குறித்த இந்தப் பிரகடனம் அம்மாற்றத்திற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

தமிழ்நாட்டின் தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் சேகரிக்கப்பட்ட இரும்பு வார்ப்பு களிமண் கசடுகள், மகாராஷ்டிரா மாநிலம், புனே நகரில் உள்ள பீர்பால் சகானி தொல் அறிவியல் ஆய்வு நிறுவனம், குஜராத் மாநிலம், அகமதாபாத் நகரிலுள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகம் ஆகிய தேசிய அளவில் புகழ்பெற்ற ஆய்வு நிறுவனங்களுக்கும் மற்றும் அமெரிக்காவின் ஃபுளோரிடா மாநிலத்தில் உள்ள பீட்டா ஆய்வகத்துக்கும் அனுப்பப்பட்டு, அம்மாதிரிகளின் காலம் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

OSL பகுப்பாய்வு மற்றும் கதிரியக்கப் பகுப்பாய்வு ஆகியவற்றின் மூலம் இம்மூன்று ஆய்வு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட ஒரே மாதிரியான ஆய்வு முடிவுகள் மூலம், "5,300 ஆண்டுகளுக்கு முன்பே, கி.மு.3,345லேயே தென்னிந்தியாவில் இரும்பு அறிமுகமாகிவிட்டது" என்ற வரலாற்று உண்மை அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

புராணப் புரட்டுகள் மூலம் அல்ல, இரண்டுவிதமான அறிவியல் ஆய்வுகள் மூலம் தமிழ் நிலத்தில் இருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்பதை நிரூபித்து, தமிழர்களின் தொன்மையை உலகுக்கு உணர்த்தியிருக்கும் தளபதி அவர்களின் இந்த ஆய்வுப் பிரகடனம், நம் முத்தமிழறிஞர் கலைஞர் பழம் பெருமை வாய்ந்த தமிழைச் செம்மொழியாக்கிய சாதனைக்கு ஒப்பானது, நிகரானது.

கால்டுவேல், பரிதிமாற்கலைஞர் காலத்திலிருந்தே தமிழைச் செம்மொழியாக்கும் முயற்சிகள் நடந்துவந்தன என்றாலும், அதனைச் சாதித்துக் காட்டியவர் நம் கலைஞர். அவரது முயற்சியால் 2004ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் நாள் நாடாளுமன்றத்தில் அப்போதைய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தமிழ் மொழியைச் செம்மொழியாக அறிவித்தார். இந்திய மொழிகளில் செம்மொழி என அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட முதல் மொழி நம் தமிழ் மொழியே ஆகும். இதன் முழுப் பெருமையும் கலைஞரையே சாரும். இதையடுத்து 2010ஆம் ஆண்டில் கலைஞர் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை மிகப் பிரம்மாண்டமாக கோயம்புத்தூரில் நடத்திக் காட்டினார்.

தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாயும் என்பதற்கிணங்க, தமிழினத்தின் தொன்மையை உலகிற்கு நிரூபித்த ஆய்வுகளுக்கு உறுதுணையாக இருந்து, வரலாற்றுச் சிறப்புமிக்க பிரகடனத்தை அறிவித்திருக்கிறார், நம் தளபதி.

இன்றைய மனிதர்களை சேப்பியன் இனம் என்று வரலாற்று ஆய்வாளர்கள் குறிக்கிறார்கள். சுமார் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு உருவானதாக கருதப்படும் இந்த சேப்பியன் இனம் கொஞ்சம் கொஞ்சமாக நாகரிக மாற்றம் அடைந்துள்ளது. பழைய கற்காலம், புதிய கற்காலம், களிமண் காலம், இரும்பு காலம், செம்பு காலம், வேளாண் காலம், சங்க காலம், குடித்தலைவன் காலம், மன்னராட்சிக் காலம், ஆங்கிலேயர் ஆட்சிக் காலம் கடந்து இன்றைய ஜனநாயக ஆட்சி காலம் வரை இந்த அனைத்து வரலாற்றுத் தடங்களிலும் திராவிட இனம் நிலைத்து நிற்கிறது.



**இ.பரந்தாமன் எம்.எல்.ஏ.**
*சட்டத்துறை இணைச் செயலாளர், தி.மு.க.*

இதை ஏன் தமிழினம் என்று கூறவில்லை? தமிழ் மட்டும் பேசுபவர்கள் என்றால், தமிழினம் எனலாம். ஆனால், நமது தமிழ் பல்கிப் பெருகி, பல மொழிகளுக்குத் தாய்மொழியாகத் திகழ்கிறது. இப்படிப் பல பண்பாடுகளுக்குத் தாயாகவும் பல இனங்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர்களைத்தான் திராவிட இனம் என்று மொழியியல் ஆய்வாளர்கள், மானுடவியல் ஆய்வாளர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள் தெளிவாக ஆவணப்படுத்தியுள்ளனர்.

இந்தியத் துணைக் கண்டத்தின் அகன்ற நிலப்பரப்பில் வலம் வந்த ஓர் இனத்தின் அடையாளத்தை ஒரு மொழியோடு சுருக்கிக் கொள்வது சரியாக இருக்காது என்பதால், திராவிட இனம் என்று அழைப்பது சரியானது. திராவிடம் என்பது ஒரு கருத்தியல் அரண். அந்த அரிய பெட்டகத்தில் கிடைத்திட்ட இன்னொரு மாணிக்கம்தான், "இரும்புக் காலம் எங்கள் தமிழ் நிலத்திலிருந்து தொடங்கியது" என முதல்வர் வெளியிட்டிருக்கும் ஆய்வுப் பிரகடனம்.

வரலாற்றுக்கு முந்தைய தொல்லியல் எச்சங்கள் எனப்படும் சுமார் 8 கோடி ஆண்டுகளுக்கு முன்பு உயிரினங்கள் வாழ்ந்ததற்கான கடல் படிமங்கள், கல்மரம் போன்ற தொல்லியல் ஆதாரங்கள் இன்றளவும் நமது அரியலூர், கடலூர், விழுப்புரம் பகுதிகளில் காணப்படுகின்றன. அதற்கு அடுத்ததாக சேப்பியன் என்றழைக்கப்படும் தற்போதைய மனித இனத்தின் மூதாதையர்கள், பழைய கற்காலம் என்று வரையறுக்கப்படும் சுமார் 2 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்ததற்கான கற்கருவிகளும், மொழிக்கு முந்தைய கீரல் ஓவியங்களும், ஓவியத்தின் மறுமலர்ச்சியாக பாறை ஓவியங்களும் திருவள்ளூர் அருகில் உள்ள அத்திரம் பாக்கம், குடியம், திண்டிவனம் அருகே உள்ள பெருமுக்கல், உளுந்தூர் பேட்டை அருகில் உள்ள குலாம் தக்கா, திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை, கீழ்வாலை, செத்தவரை, ஏலகிரி மலைப்பகுதி மற்றும் அகரம் வெப்பாளம்பட்டி குன்றுகளில் இன்றளவும் காணப்படுகின்றன.

ஓவியங்கள் காலப்போக்கில் எழுத்துக்களாகப் பரிணாமம் பெற்று, தமிழ் பிராமி, வட்டெழுத்து என வளர்ச்சியடைந்து, தற்போது செம்மைப்படுத்தப்பட்ட தமிழ் மொழி எனப் பல ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து தமிழ் மொழியும், இனமும் உயிர்ப்புடன் உள்ளது. பல்வேறு காலக் கட்டங்களிலும் திராவிடம் என்கிற கட்டமைப்பே இனப் பாதுகாப்புக்கு மிக முக்கிய காரணமாக இருந்து வந்திருக்கிறது. அதன் அடிப்படையில் கடந்த 5 ஆயிரம் ஆண்டுகளாக நம் தமிழ் மொழியையும், இனத்தையும் திராவிடம் என்கிற காப்புச் சொல் முன்னின்று காத்து வருவதைத் தொல்லியல் ஆய்வாளர்கள், அறிவியலாளர்கள், மானுடவியலாளர்கள் உறுதிபடுத்திவருகின்றனர்.

தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, விருதுநகர் பகுதிகளில் இரும்பு வார்த்தெடுத்த களிமண் கசடுகள் உள்ளதைத் தமிழ்நாட்டின் தொல்லியல் துறையும் தொல்லியல் ஆய்வாளர்களும் கண்டெடுத்து, அவற்றைப் புகழ்பெற்ற ஆராய்ச்சி நிறுவனங்களில் அறிவியல் பகுப்பாய்வுக்கு உட்படுத்தி, அதன் மூலம் இதன் காலம் சுமார் இன்றிலிருந்து 5300 ஆண்டுகள் முற்பட்டது என்பதைக் கண்டறிந்தனர்.

இரும்பின் அறிமுகம் மனித நாகரிக வளர்ச்சிக்கு அடித்தளமிட்ட மிக முக்கியத் தொழில்நுட்பமாக அமைந்தது. காட்டை நாடாக்கவும், வேளாண் வளர்ச்சி பெருகவும், சமூக உருவாக்கத்துக்கும் அடிப்படையாய் அமைந்தது இரும்பு. வேட்டையாடிச் சமூகமாக இருந்த ஆதிமனிதன் வேளாண் சமூகமாக வளர்ச்சி பெற்றதற்கான தொல்லியல் தடயங்களும் அவன் பயன்படுத்தி வந்த ஆயுதங்களும் இன்னமும் ஆற்றுப்படுகைகளில் புதையுண்டு கிடப்பதைக் கண்டறிந்து, அவற்றின் தொன்மையை கார்பன் பகுப்பாய்வு மூலம் நிரூபித்து, தமிழ் இனத்தின் தொன்மைக்கும் மதிநுட்பத்திற்கும் உலக ஆராய்ச்சி நிறுவனங்களிடமும் ஒப்புதல் பெற்றுவிட்டது தளபதியின் திராவிட அரசு.

இதுவரையிலும் சிந்து சமவெளி நாகரிகத்தின் செம்பு காலமே பழமையானது என்று கருதப்பட்டு வரும் நிலையில், அச்செம்பு காலத்துக்கும் முற்பட்ட இரும்புக் காலம் தமிழ் நிலத்தில் இருந்திருக்கிறது, இங்கு வாழ்ந்துவந்த நம் மூதாதையர்கள் 5,300 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு பண்பட்ட சமுதாயமாக இருந்துள்ளனர் என்பதை அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கிறார் திராவிட தேசத்தின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

அதோடு தமிழர் பண்பாட்டையும், பழங்காலத் தமிழர்களின் எழுத்தறிவு, நாகரிக வாழ்வு முறைமைகளை இன்றைய தலைமுறையினரும் வருங்கால சந்ததியினரும் அறிந்துகொள்வதற்காக கீழடி அருங்காட்சியகத்தை அமைத்து, அதன் தொடர்ச்சியாக பொருநை அருங்காட்சியகத்தையும் அமைத்தவர் நம் தளபதி. இப்போது கங்கைகொண்ட சோழபுரம் அருங்காட்சியகத்துக்கும் அடிக்கல் நாட்டி தமிழர் பெருமையை உலகிற்கு உரக்கக் கூறியிருக்கிறார்.

வரலாறு இருப்பவன் அறிவித்துக் கொள்கிறான், வரலாறு இல்லாதவன் ஆக்கிரமித்துக் கொள்கிறான் என்பார்கள். அதன்படி சரஸ்வதி நாகரிகம், தேவபாஷை, புராணம், இதிகாசம், சனாதனம், கும்பமேளா, கோமியம் என்றெல்லாம் கதை விட்டுக்கொண்டே இருக்கும் கூட்டம் இரும்புக் காலம் குறித்த அறிவிப்புக்கு அமைதி காக்கிறது. அதேநேரம், நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி திராவிடர்களின் இரும்புக் காலத்தை இந்தியாவின் பெருமை என்று பாராட்டியிருக்கிறார்.

இப்போது அறிவியல்பூர்வமாக, வரலாற்றுச் சான்றுகளுடன் திராவிட வரலாறு உலகின் மூத்த வரலாறாக தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழ் மூத்த மொழி, திராவிடம் உலகில் மூத்த இனம் என்று பிரகடனப்படுத்திப் புதிய வரலாறு படைத்திருக்கிறார், நம் திராவிடத் தலைவர். இதன் மூலம் ஒவ்வொரு தமிழரையும் நம் முதல்வர் பெருமைப்பட வைத்திருக்கிறார்.

இந்த ஒரே ஒரு சாதனை போதும். சந்திரனும் சூரியனும் உள்ள மட்டும் திராவிட இனமும் திராவிட முன்னேற்றக் கழகமும் தலை நிமிர்ந்து நிற்கும்.